சார்பு நீதிமன்றம், இலால்குடி.

OS.No.163/2019

2021-ம் ஆண்டு செவ்வாய் கிழமை ஆகஸ்ட் 24-ம் நாள் PW1 சாட்சியான வாக்குமூலம். 54 வது விதிகள் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.பி.லட்சுமி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் - விஸ்வநாதன்

த/பெ -

வயது -

ஊர் -

வட்டம் -

மாவட்டம் -

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 02.08.2019 ம் தேதியில் இந்த வழக்கின் வாதி வழக்கை நடத்துவதற்குஅதிகாரம் எடுத்து எனக்கு எழுதிக்கொடுத்த அதிகார ஆவணம் அசல் வா.சா.ஆ.1. வாதியின் பெயர் அஞ்சய் வினோத் என்று மாற்றம் செய்து பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் வருடத்திய செப்டம்பர் மாத அரசு பதிவிதழ் வா.சா.ஆ.2. 26.09.2011 ம் தேதியில் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட கணிணி நகல் வா.சா.ஆ.3. 12.07.2018 ம் தேதியில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய உடன்படிக்கை பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4. 17.11.2018 ம் தேதியில் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் வா.சா.ஆ.5. அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதைக் காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6. நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை ஏற்றுக்கொண்டு வழக்கில் தீர்வு காண வேண்டுகிறேன்.